Section 173 BNSS

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.) BNSS
(குற்ற விசாரணை முறைச் சட்டப்பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8129871

1. District மாவட்டம் : **Thoothukudi** PS காவல் நிலையம்: **Vigilance and Anti-Corruption Thoothukudi** Year ஆண்டு: **2025** FIR No. மு.த.அ. எண்: **02/2025** Date நாள்: **04.03.2025**

2. (i) Act சட்டம்: **Prevention of Corruption Act, 1988 as Amended in 2018** Sections பிரிவுகள்: **7**
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் **On 03.03.2025** Date from : நாள் முதல் Date to : நாள் வரை
Time Period : நேர அளவு **Before 17.15 hrs** Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் **04.03.2025** Time : நேரம் **12.00 hrs**
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் **04.03.2025** Time : நேரம் **12.00 hrs**

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக **கணினி தட்டச்சு மூலமாக**

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் **About 10 Kms North East.**
Beat Number : முறைக் காவல் எண்
(b) Address : முகவரி **O/o the DistrictRegistrar(Audit) Thoothukudi District**
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் திரு.கோ.ரமேஷ்
(b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் கோபால்
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு
(d) Nationality : நாட்டினம் இந்தியன்
(e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள்
Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் Zonal Deputy Tahsildar
(g) Address : முகவரி Thoothukudi Taluk Office, Thoothukudi

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

Tr.S.Sadhasivam, aged 58/2025, S/o Tr.K.Sonai, District Registrar (Audit), Integrated Registration Building, Near New Bus Stand, Thoothukudi and one another

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் / தகவல் கொடுப்பதில் தாமதம் **No**

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

----

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு ----

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் ----

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ........J.Anitha... Rank Inspector of Police to take up the Investigation / Refused Investigation / transferred to PS................................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ................................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

04/03/25 A.3.2025

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 04.03.2025 at 13.30 hrs
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் ........S. PETER PAUL DURAI
Rank: நிலை ......................No. எண் ..........

Deputy Superintendent of Police
Vigilance And Anti Corruption
Thoothukkudi District
Thoothukkudi

**Attachment to Column No.12 of First Information Report in Thoothukudi Vigilance and Anti-Corruption Cr.No.02/2025**

பணிந்து அனுப்பப்படுகிறது.

| | |
|---|---|
| 1. Tr.S.Sadhasivam, aged 58/2025,<br>S/o Tr.K.Sonai,<br>District Registrar (Audit),<br>Integrated Registration Building,<br>Near New Bus Stand,<br>Thoothukudi.<br><br>2. Tr.R.Selvakumar, aged 39/2025,<br>S/o Tr.S.Ravindran,<br>Assistant,<br>Pudukottai SRO office,<br>i/c Sub Registrar,<br>Eral Sub-Registry, Thoothukudi. | தூத்துக்குடி மாவட்டம் ஒருங்கிணைந்த பத்திரப் பதிவுத் துறை அலுவலக கட்டிடத்தின் இரண்டாவது தளத்தில் அமைந்துள்ள தூத்துக்குடி மாவட்ட பதிவாளர் (தணிக்கை) அலுவலகத்தில் உள்ள தூத்துக்குடி மாவட்ட பதிவாளர் (தணிக்கை) அவர்கள் அவரது கட்டுப்பாட்டில் உள்ள சார்பதிவகங்களில் பத்திரப்பதிவிற்கு |

வரும் பத்திரங்களின் முத்திரைத் தீர்வை கட்டணம், வழிகாட்டி மதிப்பு மற்றும் விதிமுறை மீறல்கள் செய்யப்பட்டுள்ளதா என்பது குறித்து தணிக்கை செய்து தணிக்கைத் தடை ஏற்படுத்தாமல் இருக்க சார்பதிவாளர்களிடமிருந்து நேரடியாகவும், அவருடைய அலுவலக பணியாளர்கள் மூலமும் லஞ்சமாக பணம் பெற்று வருவதாக கிடைத்த ரகசிய தகவலின் பேரில் 03.03.2025 ஆம் தேதி மாலை 17.50 மணி முதல் 21.45 மணி வரை துணை ஆய்வுக் குழு அலுவலர் நிலையில் திரு.கோ.ரமேஷ், மண்டல துணை வட்டாட்சியர், துணை ஆய்வு குழு அலுவலர் நிலையில் வட்டாட்சியர் அலுவலகம், தூத்துக்குடி வட்டம், தூத்துக்குடி மாவட்டம்அவர்களுடன் தூத்துக்குடி கீழுர் சார்பதிவாளர் அலுவலகத்தில் நடத்திய திடீர் சோதனையின் அடிப்படையில் துணை ஆய்வுக்குழு அலுவலர் நிலையில் திரு.கோ.ரமேஷ் அவர்கள் கொடுத்த புகார் மனுவை 04.03.2025-ம் தேதி நான் தூத்துக்குடி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலக பணியில் இருந்தபோது காலை 12.00 மணிக்கு பெற்று தூத்துக்குடி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண் 02/2025, பிரிவு 7 of PC Act 1988 as Amended in 2018–ன் படி மார்ஜினில் கண்ட எதிரிகளின் மீது வழக்கு பதிவு செய்தேன். புகார் மனுவின் விபரம் பின்வருமாறு : அனுப்புநர் : கோ.ரமேஷ், மண்டல துணை வட்டாட்சியர், துணை ஆய்வு குழு அலுவலர் நிலையில், வட்டாட்சியர் அலுவலகம், தூத்துக்குடி வட்டம், தூத்துக்குடி மாவட்டம். பெறுநர் : காவல்

துணைக் கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, தூத்துக்குடி. அய்யா, பொருள் :- தூத்துக்குடி மாவட்ட பதிவாளர் (தணிக்கை) அலுவலக திடீர் தணிக்கை செயல்முறைகள் - சட்ட மேல் நடவடிக்கை எடுக்கக் கோருவது தொடர்பாக. ****** தூத்துக்குடி மவாட்டம் ஒருங்கினைந்த பத்திரப்பதிவு அலுவலக கட்டிடத்தில் இரண்டாவது தளத்தில் அமைந்துள்ள மாவட்ட பதிவாளர் (தணிக்கை) அலுவலகத்தில் உள்ள மாவட்ட பதிவாளர் (தணிக்கை) அவர்கள் அவரது கட்டுப்பாட்டில் உள்ள சார்பதிவகங்களில் பத்திரப்பதிவிற்கு வரும் பத்திரங்களின் முத்திரைத் தீர்வை கட்டணம், வழிகாட்டி மதிப்பு மற்றும் விதிமுறை மீறல்கள் செய்யப்பட்டுள்ளதா என்பது குறித்து தணிக்கை செய்து தணிக்கைத் தடை ஏற்படுத்தாமல் இருக்க சார்பதிவாளர்களிடமிருந்து நேரடியாகவும், அவருடைய அலுவலக பணியாளர்கள் மூலமும் லஞ்சம் பெற்று வருவதாக கிடைத்த ரகசிய தகவலின் பேரில் தூத்துக்குடி மாவட்ட பதிவாளர் (தணிக்கை) அலுவலகத்தை எனது தலைமையில் தூத்துக்குடி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை காவல் துணை கண்காணிப்பாளர், பெண் காவல் ஆய்வாளர் திருமதி.அனிதா மற்றும் போலீஸ் பார்ட்டியுடன் கிளம்பி நேற்று (03.03.2025-ம் தேதி) மாலை 17.15 மணிக்கு தூத்துக்குடி புதிய பேருந்து நிலையம் அருகில் அமைந்துள்ள ஒருங்கிணைந்த பத்திரப்பதிவுத்துறை கட்டிட வளாகத்திற்கு அருகே சென்று 17.50 மணிவரை தூத்துக்குடி மாவட்ட பதிவாளர் (தணிக்கை) அலுவலக நடவடிக்கைகளை இரகசியமாக கண்காணித்ததில் கிடைத்த ரகசிய தகவலின்படி தூத்துக்குடி மாவட்ட பதிவாளர் (தணிக்கை) ஆக பணிபுரியும் திரு.சோ.சதாசிவம் என்பவர் சார்பதிவாளர்களிடமிருந்து லஞ்சமாக பணம் பெற்று வருவதற்கான முகாந்திரம் தெரிய வந்ததால் 03.03.2025-ம் தேதி மாலை சுமார் 17.50 மணிக்கு தூத்துக்குடி மாவட்ட பதிவாளர் (தணிக்கை) அலுவலகத்திற்குள் சென்று திடீர் தணிக்கை செய்ததில் மேற்படி மாவட்ட பதிவாளர் (தணிக்கை) அலுவலகத்திற்குள் District Registrar (Audit) என்று எழுதப்பட்டிருந்த அறையில் அமர்ந்திருந்த பின்னர் பெயர் விபரம் கேட்டு தெரிந்த திரு.சோ.சதாசிவம், த-பெ சோனை, மாவட்ட பதிவாளர் (தணிக்கை) என்பவரது இருக்கைக்கு இடதுபுறம் தரையில் காணப்பட்ட ஒரு மஞ்சள் நிற J.N.டெக்ஸ்டைல்ஸ் பட்டு மஹால் சூப்பர் ஸ்டோர் என்ற எழுத்துக்களுடன் வேறு சில எழுத்துக்களும் அச்சிடப்பட்ட பையினுள் கத்தையாக காணப்பட்ட பணம் ரூ.1,80,000/- மற்றும் அதே பையினுள் காணப்பட்ட ஒரு காக்கி நிற கவரினுள்

கத்தையாக இருந்த பணம் ரூ.1,50,000/- ஆகியவற்றிற்கு உரிய விளக்கம் அளிக்க இயலாமல் சந்தேகத்திற்கு இடமான வகையில் வைத்திருந்ததால் மொத்த பணம் ரூ.3,30,000/-, அந்தப் பணம் வைக்கப்பட்டிருந்த மேற்படி மஞ்சள் நிற பை, காக்கி நிற கவர் - ஒன்று, ரூபாய் நோட்டு கட்டுகளில் சுற்றப்பட்டிருந்த SBI SPIC NAGAR BRANCH – (3143) 26 FEB 2025 என்ற ஸ்லிப் இரண்டு எண்ணமும், SBI ERAL BRANCH – (10483) 14 FEB 2025 என்ற ஸ்லிப் ஒன்று எண்ணமும், மற்றும் மாவட்ட பதிவாளர் (தணிக்கை) அலுவலக வாயிலில் நின்று கொண்டிருந்த பின்னர் பெயர் விபரம் கேட்டு தெரிந்த ஏரல் சார்பதிவாளர் (பொறுப்பு) ஆக பணிபுரியும் திரு.செல்வகுமார் த-பெ ரவீந்திரன் என்பவரது வலது பக்க பின்புற பேண்ட் பாக்கெட்டினுள் கத்தையாக காணப்பட்ட பணம் ரூ.33,000/-ற்கு உரிய விளக்கம் அளிக்க இயலாமல் சந்தேகத்திற்கு இடமான வகையில் வைத்திருந்ததால் அந்தப் பணம் ரூ.33,000/-ம் ஆக மொத்தம் ரூ.3,63,000/- மற்றும் மேலே குறிப்பிட்டுள்ள ஆவணங்கள் ஆகியவை நேற்று 03.03.2025-ம் தேதி 17.50 மணி முதல் 21.45 மணி வரை தயார் செய்யப்பட்ட செயல்முறைகள் மூலம் கைப்பற்றப்பட்டது. மேலும், மேற்படி சோதனையின்போது மாவட்ட பதிவாளர் (தணிக்கை) அலுவலகத்திற்குள் இருந்த அனைவரிடமும் எனது முன்னிலையில் வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டது. மேலும், மேற்படி சோதனையின்போது மாவட்ட பதிவாளர் (தணிக்கை பிரிவு) தனி நபர் பணம் கையிருப்பு பதிவேடு 2025 தொகுதி எண்.3 மற்றும் மாவட்ட பதிவாளர் (நிர்வாகம்) 2025-ம் ஆண்டு தனி நபர் பணம் கையிருப்பு பதிவேடு ஆகிய இரண்டு பதிவேடுகள் மற்றும் மாவட்ட பதிவாளர் (தணிக்கை) அலுவலக வருகைப் பதிவேடு 2025 ஆகிய மூன்று பதிவேடுகளும் கைப்பற்றப்பட்டது. மேற்படி கைப்பற்றப்பட்ட மொத்தப் பணம் ரூ.3,63,000/- மற்றும் மஞ்சள் நிறப் பை மற்றும் செயல்முறையில் கைப்பற்றப்பட்ட ஆவணங்களை தங்களிடம் ஒப்படைத்து தூத்துக்குடி மாவட்ட பதிவாளர் (தணிக்கை) திரு.S.சதாசிவம் மற்றும் ஏரல் சார்பதிவாளர் (பொறுப்பு) திரு.R.செல்வகுமார் ஆகியோர்கள் மீது சட்டப்படியான நடவடிக்கை எடுக்க கேட்டுக்கொள்கிறேன். Sd/- 04.03.2025, கோ.ரமேஷ், மண்டல துணை வட்டாட்சியர், துணை ஆய்வு குழு அலுவலர் நிலையில் வட்டாட்சியர் அலுவலகம், தூத்துக்குடி வட்டம், தூத்துக்குடி மாவட்டம். Sir, Received the complaint on today (04.03.2025) at 12.00 hrs and registering the complaint as

Thoothukudi V&AC Cr.No.02/2025, U/s 7 of PC Act, 1988 as Amended in 2018. Sd/- 04.03.2025, S.Peter Paul Durai, Deputy. Supdt. of Police, V&AC, Thoothukudi Detachment. இதன் அசல் முதல் தகவல் அறிக்கை, கோ.ரமேஷ் அவர்களின் அசல் புகார் மனு மற்றும் தூத்துக்குடி மாவட்ட ஒருங்கிணைந்த பத்திரப்பதிவுத்துறை அலுவலக கட்டிடத்தில் இரண்டாவது தளத்தில் அமைந்துள்ள தூத்துக்குடி மாவட்ட பதிவாளர் (தணிக்கை) அலுவலகத்தில் வைத்து தயார் செய்த செயல்முறைகள் ஆகியவற்றை இணைத்து மேன்மைமிகு தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிமன்ற நடுவர், தூத்துக்குடி அவர்களுக்கு அனுப்பியும் இதர நகல்களை சம்பந்தப்பட்ட உயரதிகாரிகளுக்கு அனுப்பியும் ஒரு நகலை வழக்கு விசாரணைக்காக திருமதி.J.அனிதா, காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, தூத்துக்குடி பிரிவு அவர்களிடம் ஒப்படைக்கிறேன்.

4.3.2025

( S. PETER PAUL DURAI )

**Deputy Superintendent of Police**
**Vigilance And Anti Corruption**
**Thoothukkudi District**
**Thoothukkudi**